**தலைப்பு 278 இரத்தினபுரி மாவட்டச் செயலகம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை மாவட்டச் செயலகத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தி முதல் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1.1 மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (அ) | அயகம | (எ) | கலவான | (க) | நிவிதிகல |
| (ஆ) | எலபாத | (ஏ) | கஹவத்த | (கா) | பெல்மடுல்ல |
| (இ) | எஹலியகொடை | (ஐ) | கிரிஎல்ல | (கி) | பலாங்கொடை |
| (ஈ) | எம்பிலிபிட்டி | (ஒ) | குருவிட்ட | (கீ) | இரத்தினபுரி |
| (உ) | இம்புல்பே | (ஓ) | கொலன்ன | (கு) | வெலிகெபொல |
| (ஊ) | ஓபநாயக்க | (ஔ) | கொடகவெல | | |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

இரத்தினபுரி மாவட்டச் செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 யூன் 04 ஆம் திகதி அந்த அலுவலகத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின்

அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---------------------

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

---------------------------------

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

---------------------------------------

மாவட்டச் செயலகத்திற்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 753 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 724 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் தேறிய ஏற்பாடுகளில் சேமிப்பு ரூபா 29 மில்லியன் அதாவது தேறிய ஏற்பாடுகளில் 4 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 584 | 578 | 6 | 1 |
| மூலதன | 169 | 146 | 23 | 14 |
| மொத்தம் | **753** | **724** | **29** | 4 |

## (ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்

பல்வேறு செயற்பாடுகளுக்காக 27 அமைச்சுக்களிலிருந்தும் 20 திணைக்களங்களிலிருந்தும் மீளாய்வாண்டிற்காக முறையே ரூபா 3,469 மில்லியன் தொகையும் ரூபா 1,758 தொகையுமாக ரூபா 5,227 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதிஏற்பாடுகளில் முறையே ரூபா 2,940 மில்லியன் தொகையும் ரூபா 1,674 தொகையுமாக ரூபா 4,614 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் சேமிப்பு முறையே ரூபா 529 மில்லியன் மற்றும் ரூபா 83 மில்லியன் ஆக ரூபா 613 மில்லியன் காணப்பட்டது. ஒவ்வொரு அமைச்சிலிருந்தும் திணைக்களத்திலிருந்தும் வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு 0 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையிலான அளவைக் கொண்டிருந்தது.

**2.2 முற்பணக் கணக்குகள்**

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 27801 | 50 | 49 | 32 | 44 | 200 | 157 |

**2.3 பொது வைப்புக் கணக்குகள்**

மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6003/0000/00/0054/0000/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கு மீதி ரூபா 616 மில்லியனாக இருந்தது.

**2.4 கணக்காய்வு அவதானிப்புகள்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3.1 ஆம் பந்தி முதல் 3.13 ஆம் பந்தி வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 278 – இரத்தினபுரி மாவட்டச் செயலகம்

---

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

03 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டில் 27 சதவீத அளவைக் கொண்டிருந்தது.

### 3.2 பொது வைப்புக் கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 பிரதேச செயலகங்களில் 02 வருடங்களை விஞ்சிய ரூபா 599,532 கூட்டுத் தொகையான 12 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 571(1) இன் படி ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் நிதிப்பிரமாணம் 570 இல் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முன்னைய சகல வைப்புக்கள் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

---

27801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றுக்களின் படி அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,745,066 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையான மீதிகளிலிருந்து 2 வருடங்களுக்கு மேற்பட்ட 5 வருடங்களுக்குக் குறைந்த காலப் பகுதிக்குரிய நிலுவை மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 152,590 ஆக இருந்தது. 2014

திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

(ஆ) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியளித்தல் திணைக்களம் மூலம் மேற்கொள்ளப்பட்ட தவறுகள் வரவு வைக்கப்பட்டமையால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களப் புத்தகங்களின் படியான வரவு மீதிக்கும் திறைசேரிக் கணனி அறிக்கைகளின் படியான வரவு மீதிக்கும் இடையே ரூபா 238,090 வேறுபாடு காணப்பட்டது.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

எலபாத பிரதேச செயலகத்தினால் பெறுமதி மதிப்பிடப்படாத காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குரிய 0.34 ஹெக்டேயர் காணியொன்று 1998 ஆம் ஆண்டு முதல் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்தது.

## 3.5 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

---

செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்டமை மற்றும் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டமை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்

---

உடன்படிக்கை செய்யப்பட்ட சங்கத்தினால் நிர்மாண நடவடிக்கைகள் புறக்கணிக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது பிரதேச செயலகங்களினால் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்ட ரூபா 884,447 கூட்டுத்தொகையான 04 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாது கைவிடல்

---

எம்பிலிபிட்டி பிரதேச செயலகத்தினால் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 399,670 தொகையான செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கை செய்த அமைப்பின் செயற்திறனின்மையினால் அந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தது.

## 3.6 செயலாற்றல்

--------------------

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி மாவட்ட செயலகத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

போதியளவில் நிறைவேற்றப்படாத செயற்பாடுகள்

-----------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொலொன்ன பிரதேச செயலகத்தினால் 14 ஆம் கட்டை முதல் நந்தனகம வரை வீதியை நிர்மாணிப்பதற்காக ரூபா 767,929 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த நிர்மாணிக்கப்பட்ட வீதியில் 03 இடங்களில் கொங்கிரீட் படை வெடித்திருந்திருந்ததுடன் மேலும் இரு இடங்களில் போடப்பட்டிருந்த கொங்கிரீட்டின் பலம் குறைவாக இருந்தது.

(ஆ) வெலிகேபொல, பனான சேவைப் பகுதியில் ரூபா 25,248 செலவில் நடைபாதையொன்று (Pavement) நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதன் வெள்ளை சாந்து முழுமையாக சிதைவடைந்திருந்தது.

(இ) வெலிகெபொல, லேகம்கொட தெய்யன்கே வயல் வீதிக்கு கொங்கீரீட் இடுவதற்காக ரூபா 177,863 தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த வீதிக்கு பயன்படுத்தப்பட்ட 1:3:6 (37.5mm) கொங்கிரீட் கலவை குறிப்பிட்ட நியமத்தில் காணப்படாமையினால் அதிலுள்ள கருங்கல் இலகுவாக கொங்கிரீட் தட்டிலிருந்து கழன்று வேறாகியிருந்தது. வீதியின் சில இடங்களில் கொங்கிரீட் கலவையிடல் குறைவடைந்திருந்ததாக பலாங்கொடை நிறைவேற்றுப் பொறியியலாளரினாலும் எழுத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சிறுவர் செயலகத்தினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டைப் பயன்படுத்தி பலாங்கொடை, இம்புல்பே, கலவான, கொலொன்ன மற்றும் வெலிகெபொல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமுல்படுத்தப்படுகின்ற முன்பள்ளிப் பாடசாலைகளின் மாணவர்களுக்காக பசும் பால் கோப்பையொன்று வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு பாடசாலைகளைத் தெரிவு செய்த அடிப்படை கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த பிரிவுகளில் உள்ள மொத்த முன்பள்ளிப் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையின் படி 2013

மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது முறையே 30 சதவீதம் மற்றும் 26 சதவீதம் என்ற வகையில் மிகவும் குறைந்த மாணவர் எண்ணிக்கைக்கு இந்த உதவி வழங்கப்பட்டிருந்தது.

**3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

இம்புள்பே, கலவான, வெலிகெபொல, குறுவிட்ட மற்றும் கொலொன்ன போன்ற பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட 09 வேலைகளில் நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக ரூபா 510,507 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.8 செயற்பாட்டு நலிவுகள்**

---

இடர் முகாமைத்துவ அமைச்சின் நிதியேற்பாடுகளிலிருந்து இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் மூலம் இடர் உதவிச்சேவை செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அந்த நிதியேற்பாடுகளிலிருந்து 2012 ஆம் ஆண்டின் போது சேதமடைந்த வீடுகளை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில் 04 பிரதேச செயலகங்களின் மூலம் 06 நலனாளிகளுக்கு முதலாவது தவணையாக ரூபா 125,200 கூட்டுத்தொகையும் 02 பிரதேச செயலகங்களின் மூன்று நலனாளிகளுக்கு இரண்டாம் அல்லது மூன்றாம் தவணையாக ரூபா 190,000 கூட்டுத்தொகையம் வழங்கப்பட்டிருந்தது. அந்த உதவிகள் எவ்வித நிர்மாணச் செயற்பாடுகளுக்கும் ஈடுபடுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**3.9 முகாமைத்துவ நலிவுகள்**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) குகுலேகங்க நீர்மின் உத்தேசத் திட்டத்தின் பிரதான நுழையும் வீதிக்கு 1997 ஆம் ஆண்டின் போது 5,765 ஹெக்டேயர் காணி கைப்பற்றப்பட்டிருந்தது. அதற்காக நட்டஈடு செலுத்தவதற்கு 16 வருடங்கள் தாமதமடைந்தமையினால் வட்டியாக ரூபா 1,909,617 செலுத்தப்பட்டிருந்தது. அரசாங்க சபையொன்றில் ஏற்பட்ட நலிவுச் செயற்பாடுகளினால் இழப்பு வட்டியைச் செலுத்துவதற்கு ஏற்பட்டதாக மாவட்டச் செயலாளரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) உரிய தரப்பினரால் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமலும் செலுத்த வேண்டிய வாடகை தொடர்பாக உரிய இணக்கப்பாடின்றியும் இரத்தினபுரி பழைய பிரதேச செயலகக் கட்டிடத்தில் 08 அரசாங்க அலுவலகங்கள் நடாத்தப்பட்டிருந்தன. அரசாங்க அதிகாரசபைக்குச் சொந்தமானது என ஏற்றுக்கொள்ளப்பட்ட அதில் கட்டிடமொன்று 2013 ஆம் ஆண்டின் போது அந்த அதிகாரசபைக்கு மீண்டும் வழங்குவதற்கு இணங்கியிருந்த போதிலும் அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் இந்தக் கட்டிடம் தொடர்பான எவ்வித சட்டரீதியான உரித்தும் இரத்தினபுரி பிரதேச செயலகத்திற்கு இல்லாதிருந்ததாக மாவட்ட செயலாளரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 3.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) தன்ஜன்தென்ன விகாரைக்கு அண்மையில் உத்தேசிக்கப்பட்ட புத்தர் சிலைக்கு செல்வதற்கான படிக்கட்டுக்களை நிர்மாணிப்பதற்கு ரூபா 151,136 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், புத்தர் சிலையொன்று அமைக்கப்படாமையினால் படிக்கட்டுக்களை நிர்மாணிப்பதற்குச் செலவிட்ட பணம் பயனற்றதாகியிருந்தது.

(ஆ) மதகுடன் உடகம வெட்டகொலந்த வீதியை நிர்மாணிக்கும் போது முறையான அங்கீகாரமின்றி அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட மேலதிகமாக நிர்மாணத்ததினால் அதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 144,250 தொகை சிக்கனமற்றதாக இருந்தது.

## 3.11 பயனற்ற செலவினம்

சின்ன வெங்காயப் பயிர்ச் செய்கையின் பாதகங்களைக் குறைத்து விவசாயிகளுக்கு திருப்தியான வருமானமொன்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் விதை வெங்காயங்களுக்குப் பதிலாக சிறந்த விதைகளின் மூலம் சின்ன வெங்காயப் பயிர்ச் செய்கையை பரவலாக்கும் நோக்கத்துடன் 2013 ஆம் ஆண்டின் போது சின்ன வெங்காய விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் படி சின்ன வெங்காயம் 7,500 கிலோ கிராம் பயிர்செய்து 1500 கிலோகிராம் விதைகளை பெறுவதற்கு அதனை 500 ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்து அதன் மூலம் ரூபா 487,500,000 பெறுமதியான சின்ன வெங்காயம் 3,250,000 கிலோகிராம் விளைச்சலைப்

பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,359,500 தொகை செலவில் சின்ன விதை வெங்காயம் 7,500 கிலோகிராம் கொள்வனவு செய்யப்பட்டு அதனை கொலொன்ன மற்றும் எம்பிலிபிட்டி பிரதேச செயலக பிரிவுகளில் குடியிருந்துவரும் 64 விவசாயிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்பக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வழங்குனரைத் தெரிவு செய்து கட்டளையிடுவதற்கு ஒரு மாதமும், கட்டளையிடப்பட்ட விதை வெங்காயம் கிடைப்பதற்கு $2^1/_2$ மாதமும் தாமதமாகியிருந்தது.

(ஆ) 08 விவசாயிகளுக்கு 976 கிலோகிராம் விதை வெங்காயம் விநியோகிக்கப்பட்டதாக பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 350 கிலோ கிராம் மாத்திரம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதனால் ரூபா 95,343 தொகையான 526 கிலோகிராம் விதை வெங்காயம் தொலைந்து போயிருந்தது.

(இ) இந்த விதை வெங்காயங்களை விவசாயிகளுக்கு இலவாசமாகப் பகிர்ந்தளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 10 விவசாயிகளிடமிருந்து ரூபா 33,820 தொகை பெறப்பட்டிருந்தது.

(ஈ) பயிர் செய்யப்பட்ட 7,500 கிலோ கிராம் விதை வெங்காயத்திலிருந்து கிலோ கிராம் 1:7 முதல் 1:15 வரையிலான வீச்சில் விளைச்சல் கிடைக்கும் என உரிய விவசாய உதவிப் பணிப்பாளரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 3,250,000 கிலோகிராம் அறுவடையைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட இந்த செயற்திட்டத்திலிருந்து பெறப்பட்ட விளைச்சல் 5,411 கிலோ கிராம் மாத்திரமாக இருந்தது.

(உ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டியின் படி வழங்குனருடன் எழுத்து மூல உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

மாவட்ட விவசாயப் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி பயனுள்ள காலத்தில் விவசாயிகளுக்கு விதை வெங்காயம் கிடைக்காமை, மோசமான காலநிலை ஆரம்பிக்கும் பொது பயிர்ச் செய்கைக்காக பொருத்தமற்ற காலத்தில் விதை வெங்காயம்

பகிர்ந்தளிக்கப்பட்டு அவற்றை பயிர்செய்வதற்கு ஆலோசனை வழங்குதல், வெங்காயத்தை முளைகொள்ளச் செய்யாமை (Verbalization), பெறப்பட்ட விதை வெங்காயம் மாதிரிகளுக்கு இணங்கியதாக எனவும், அளவை பயிர்ச் செய்கைக்கு தகுதியானது எனவும் விடய அறிவுரை உத்தியோகத்தரினால் பரிசோதனை செய்யப்படாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் இந்த செயற்திட்டம் முழுமையாக வெற்றியளிக்காமல் அதற்காக செலவிட்ட ரூபா 1,359,500 தொகையும் பயனற்றதாக இருந்தது.

### 3.12 மேலதிகமாகச் செலுத்துதல்

பலாங்கொடை பிரதேச செயலகத்தினால் நிறைவேற்றப்பட்ட 03 வீதிகளுக்காக கருங்கல்லுக்காக கொடுப்பனவு செய்யும் போது போக்குவரத்துச் செலவினங்களை உள்ளடக்கிய விலை வீதம் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த கல் போக்குவரத்திற்காக அதற்கு மேலதிகமாக ரூபா 9,850 தொகையும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.13 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 59 | 50 | 09 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 41 | 20 | 21 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1183 | 1145 | 62 | 24 |
| (iv) | ஆரம்ப நிலை | 175 | 180 | 05 | 10 |
| (v) | ஏனைய (அமைய) | - | - | - | - |
| | மொத்தம் | 1458 | 1395 | 97 | 34 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதிவரையில் 97 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஆட்சேர்க்கப்பட்டிருந்த மிகையான ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.